بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

அஹ்மதியாக இருந்து கொண்டு நமது பொறுப்புகள் அதிகமாகின்றன. அதனை கண்முன் நிறுத்த வேண்டும். உண்மையான அஹ்மதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது முன்மாதிரியின்படி செயல்பட முயற்சி செய்பவர் ஆவார். இறைவனது வழிகாட்டலின்படி நடக்க முயற்சி செய்பவர் ஆவார். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எவர் இறைவனுக்காக ஆகி விட்டாரோ அவருக்காக இறைவன் ஆகி விடுகின்றார். இறைவன் யாரிடமும் ஏமாற மாட்டான். காட்டுதல் தந்திரம் மூலமாக எவராவது இறைவனை ஏமாற்ற நினைத்தால் அவர் முட்டாளும் அறியாதவரும் ஆவார். அவர் தான் ஏமாற்றமடைவார்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களைவலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 05.02.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் நடந்த ஒரு மாநாட்டில் ஒருவர் தமது சொற்பொழிவில் கூறினார். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடைய இயக்கம் மற்றும் மற்ற முஸ்லிம்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால், அவர்கள் மர்யமின் மகன் மஸீஹ் உயிருடன் வானத்திற்கு சென்றதாக நம்புகிறார்கள். நாமோ அன்னார் மரணமடைந்து விட்டதாக உறுதி கொள்கிறோம். இதனைத் தவிர நமக்கும் அவர்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறெந்த வேறுபாடும் இல்லை. இந்த விஷயத்தினால் பல விவகாரங்கள், அன்னாரது வருகையின் நோக்கம் ஆகியவை தெளிவாகாத காரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உடல்நிலை சீர்கெட்டிருந்த நிலையிலும் கூட இது சம்பந்தமாக 'இவை மட்டுமே வித்தியாசம் என்பதல்ல' என்று கவனமூட்டினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 27 டிசம்பர் 1905 –ல் இதனை தெளிவுபடுத்துவதற்காக தாமே ஒரு சொற்பொழிவில், எனது வருகையின் நோக்கம் இந்த சிறிய வித்தியாசத்தை வெளிப்படுத்துவதல்ல. இந்த சிறிய பணிக்காக அல்லாஹ் ஓர் இயக்கத்தை உருவாக்க வேண்டிய அவசியம் இருந்ததில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விவரித்த அந்த செயல் நிலைகள் பற்றியும், முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற நிலைகள் பற்றியும் அவற்றை சீர்திருத்துவதற்காகவே அன்னாரை அனுப்பினான் என்றும், அவற்றுள் ஒன்று பொய்யிலிருந்து விலகுவதும், உண்மையை நிலைநாட்டுவதும் ஆகும் என்றும், உங்கள் உண்மையின் தரத்தை உயர்த்துங்கள் என்றும் ஜமாஅத்திற்கு இது தொடர்பாக போதனை செய்தார்கள். உங்களுக்கும் பிறருக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்துங்கள் என்றும் கூறினார்கள். வெறுமனே ஈமான் கொள்வது, அன்னாரின் தோற்றத்தை உண்மை என்று நம்புவது மட்டும் பயனைத் தராது.

திருக்குர்ஆனில் அல்லாஹ்வும் உண்மையான மூஃமினுக்கு இதே அடையாளத்தையே கூறியுள்ளான். லாயஷ்ஹதூனஸ்ஸூர் அவர்கள் பொய் சாட்சி கூறமாட்டார்கள். (25:73) இணை வைத்தல் மற்றும் பொய் பற்றி கூறி அதிலிருந்து தப்பிக்குமாறு கூறினார்கள். பொய்யின் பாவமும் இணை வைத்தலைப் போன்றதேயாகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் 'ஸூர்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான். அதன் பொருள், பொய், தவறான விளக்கம், தவறான சாட்சியம் அளித்தல், இறைவனுக்கு இணை வைத்தல், பொய் சாதாரணமாகப் பேசப்படுகின்ற சபைகள், அதுபோன்று பாட்டு, இசைக்கருவிகள் பயன்படுத்துதல், வீணான மற்றும் தவறான பேச்சுக்கள் உள்ள சபைகள் இவை அனைத்தும் 'ஸூர்' என்ற சொல்லில் அடங்கும். நம்பிக்கையாளர் மற்றும் இறை அடியார் என்பவர் பொய் கூறமாட்டார். வீணானவைகள் நடக்கிற மற்றும் பொய் பேசுபவர்களின் சபைக்கு சொல்லமாட்டார்கள். மேலும் அவர்கள் அல்லாஹ்வுக்கு இணை வைக்க மாட்டார்கள்; இணை வைப்பிற்கான காரியங்கள் நடக்கும் இடங்களுக்கு செல்லவுமாட்டார்கள். பிறகு அவர்கள் ஒருபோதும் பொய் சாட்சி கூறமாட்டார்கள்.

எனவே, நம்மில் ஒவ்வொருவரும் எந்த அளவுக்கு பொய்யிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் அதனால் உண்மையான மூஃமினாக ஆக முயற்சி செய்ய வேண்டும். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சொற்பொழிவிலிருந்து பொய் சம்பந்தமாக அன்னார் கூறிய விஷயங்களை எடுத்து வைக்கிறேன். அதனை கவனமாகக் கேளுங்கள். இன்று நம்மில் பலர் – கணிசமானோர் இதனைப் பற்றி கவனம் செலுத்துவது அவசியமாகும்.

முஸ்லிம்களின் வழிகேட்டிற்கும் அவர்களின் பிரிவினைக்குமான காரணத்தை அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களின் உட்புறமான பிரிவினைக்குக் காரணம் 'உலகப் பற்று' ஆகும். முஸ்லிம்களிடம் பிளவு ஏற்படக் காரணம் உலகப்பற்று ஆகும். ஏனெனில் அல்லாஹ்வின் திருப்தியே முதன்மையானது எனில் இந்த பிரிவினரின் கொள்கை தெளிவாக உள்ளது என்று எளிதாக புரிந்து கொண்டு அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டு ஒன்று திரண்டிருப்பர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: குல் இன் குன்த்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிவூனி யுஹ்பிப்குமுல்லாஹ் – நீங்கள் அல்லாஹ்விடம் அன்பு செலுத்துகின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அப்போது தான் அல்லாஹ் உங்களுடன் நட்பு செலுத்துவான். (2:32)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னாரின் அடிசுவட்டைப் பின்பற்றுங்கள். பிறகு இறைவன் என்னென்ன அருள் செய்கிறான் என்று பாருங்கள். சஹாபாக்கள் அந்த நன்னடத்தையை மேற்கொண்டார்கள். அதனால்

அவர்களை அல்லாஹ் எங்கிருந்து எங்கோ கொண்டு சென்று விட்டான்? அவர்கள் உலகத்தை எட்டி உதைத்து விட்டார்கள். முற்றிலும் உலகப் பற்றை விட்டு தனித்து விட்டார்கள். தமது விருப்பங்களின் மீது ஒரு மரணத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். நீங்கள் அன்னாரது அந்நிலையை உங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் அன்னாரது அடிச்சுவட்டில் இருக்கிறீர்களா? அந்தோ பரிதாபம்! இப்போது மக்கள் அல்லாஹ் என்ன விரும்புகிறான் என்பதை புரியவே இல்லை.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நீதிபதியாக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிபை சான்று காட்டி ஒரு சம்பவம் கூறுகின்றார்கள். ஒருமுறை என்னிடம் ஒரு மனிதர் வந்தார். அவரை எனக்கும் தெரியும். சாட்சியாளர்களை எடுத்து வைக்க இருந்தார்கள். அப்போது அவர், எனக்கு அடுத்த தவணை தாருங்கள். எனது சாட்சியாளர் வரவில்லை என்றார். ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் நகைச்சுவையாக, நான் உம்மை மிகவும் அறிவாளி என்று கருதினேன். நீர் பெரும் முட்டாளாக இருக்கிறீர்? சாட்சியை எங்கிருந்து கொண்டு வருவீர்? வெளியே சென்று ஒருவருக்கு எட்டு அனா கொடுத்தீர்கள் என்றால் உங்களுக்கு சாட்சி சொல்லப் போகிறார்கள் என்று அவரிடம் கூறினார்கள். உடனே அவர் வெளியே சென்றார். 2–3 நபரை அழைத்து வந்தார். ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் சாஹிப் அந்த சாட்சியிடம் விசாரித்த போது ஆம் நான் பார்த்தேன். இப்படி நடந்தது. அப்படி நடந்தது என்றார்.

ஹஸ்ரத் சுல்தான் அஹ்மது சாஹிப் கூறுகின்றார்கள்: நான் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். ஏன் அவர் முன்னாலேயே சிரித்தேன். நான் சொன்னதை வைத்து வெளியில் சென்று சாட்சியை அழைத்து வந்துள்ளீர். அவர்கள் என் முன்னாலேயே இவ்வளவு சுத்தமாக பொய் கூறுகிறார்கள். இறைவன் மீது சத்தியமிட்டு குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு பொய் சொல்கிறார்கள். அதன் பிறகு அவர்கள் சாட்சி கூறினார்கள். நான் அவர்களிடம் உங்களுக்கு வெட்கமாக இல்லையா? திருக்குர்ஆனை கையில் வைத்துக் கொண்டு திருக்குர்ஆன் மேல் சாட்சி கூறுகிறீர்? எனக்கு முன்பாகவே சாட்சியை அழைத்து வந்தீர்? என்று கேட்டேன். இதுவே சாட்சி கூறுபவரின் நிலையாகும். இன்றவும் இதுதான் நிலையாகும். நமக்கு ஜமாஅத்திற்கு எதிரான வழக்குகளிலும் பெரும்பாலும் இதுதான் தென்படுகிறது. பெரும்பாலாருக்கு யாருடைய வழக்கில் தாம் சாட்சி கூறுகிறோம் என்று கூட தெரியாது.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்று உலகின் நிலை மிகவும் மோசமாகி விட்டது. எந்த கோணத்தில் பார்த்தாலும் பொய் சாட்சியங்கள் உருவாக்கப்படுகின்றன. பொய்யான வழக்குகளைப் போடுவது ஒரு பொருட்டே அல்ல. பொய்யான சான்றிதழ் கூட உருவாக்கப்படுகின்றன.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஓர் அறிவற்ற மனிதன் அல்லாஹ்வை விட்டு விட்டு கல்லின் முன்னால் தலையைக் குனிகிறான். அதுபோன்றே உண்மை மற்றும் நேர்வழியை விட்டு விட்டு தனது நோக்கங்களுக்காக பொய்யை சிலையாக்குகிறான். இதனால் தான் அல்லாஹ் அதனை சிலை வணக்கத்தோடு சேர்த்துக் கூறியுள்ளான். ஒரு சிலை வணங்கி சிலையிடம் ஈடேற்றம் வேண்டுவது போன்று பொய் சொல்பவரும் தன் புறமிருந்து ஒரு சிலையை உருவாக்குகிறார். சிலை மூலமாக தமது ஈடேற்றம் கிடைக்கும் என்று கருதுகிறார். எத்தகைய வழிகேட்டில் மாட்டிக் கொண்டுள்ளீர்கள்? ஏன் சிலை வணங்குகிறீர்கள்? அந்த அசுத்தத்தை விட்டு விடுங்கள் என்று கூறினால் ஏன் விட வேண்டும் என்று கேட்கின்றனர். அது இல்லாமல் வாழ்வை கழிக்க இயலாது என்கின்றனர். இதனை விட பெரும் பேரிழப்பு வேறென்ன இருக்க முடியும்? பொய்யையே தமது ஆதாரமாகக் கருதுகின்றனர். ஆனால் நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். கடைசியில் உண்மையே வெற்றி பெறும். உண்மைக்கே வெற்றி கிடைக்கும்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஒரு சம்பவத்தை கூறுகின்றார்கள்: இந்த எளியவன் இஸ்லாத்திற்கு ஆதரவாக ஆரியர்களுக்கு எதிராக ஒரு கிறித்தவருக்கு – அவரது பெயர் ராலியா ராம். அவர் வகிலாகவும் இருந்தார். அமிர்தசரஸில் வசித்து வந்தார். அவரிடமிருந்து ஒரு பத்திரிகையும் வெளி வந்தது. அவருக்கு ஒரு கட்டுரையை பாக்கெட் வடிவத்தில் அச்சிடுவதற்காக அனுப்பினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த பாக்கெட்டில் ஒரு கடிதமும் வைத்தேன். அந்தக் கடிதத்தில் இஸ்லாத்திற்கு ஆதரவாகவும் மேலும் இதனை அச்சிடுமாறு வேண்டுகோளும் இருந்தது. எனவே அந்த கிறித்தவர் மார்க்கப் பகைமையின் காரணமாக கோபமுற்றார். எனவே, தற்செயலாக அவருக்கு பகைமையுடன் தாக்குதல் தொடுக்க வாய்ப்பு கிடைத்து விட்டது. பாக்கெட்டில் ஒரு தனி கடிதம் வைப்பது சட்டப்படி குற்றமாகும். இந்த எளியவனுக்கு அது பற்றி சிறிதும் தெரியாதிருந்தது. அத்தகைய குற்றத்திற்கு தபால் துறை சட்டப்படி 500 ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாத சிறை தண்டனை உண்டு. எனவே அவர் எனது கடிதம் கிடைத்த உடனேயே என் மீது தபால்துறை அதிகாரியிடம் வழக்கு தொடுத்து விட்டார்.

சுருக்கமாக நான் இந்த குற்றத்திற்காக குர்தாஸ்பூர் மாவட்டத் தலைவரிடம் அழைக்கப்பட்டேன். எந்தெந்த வழக்குரைஞர்களிடம் எல்லாம் இந்த வழக்குக்காக ஆலோசனை பெறப்பட்டதோ அவர்கள் அனைவரும் தந்த ஆலாசனை இதில் பொய் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. நான் பாக்கெட்டில் கடிதம் வைக்கவில்லை என்று கூறுமாறு ஆலோசனை வழங்கினர். ரலியா ராம் தாமே அதில் வைத்திருக்கலாம் என்று கூறி விடுங்கள் என்றனர். மேலும் எனக்கு ஆறுதலாக இன்னும் கூறினார்கள். அவ்வாறு கூறுவதால் சாட்சியத்தை வைத்து தான் தீர்ப்பளிக்கப்படும். இரண்டு நான்கு பொய் சாட்சிகளை தந்து விட்டால் வழக்கிலிருந்து விடுபட்டு விடலாம் என்று பொய் சாட்சிகளை எடுத்து வைக்குமாறு வக்கீல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அது அல்லாமல் நிலைமை மிகவும் சிக்கலாக உள்ளதாக வக்கீல்கள் கூறினர். விடுதலைக்கு வேறு வழியே இல்லை என்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எந்த நிலையிலும் உண்மையை விட விரும்பவில்லை. எது நடக்குமோ நடக்கட்டும் என்று நான் கூறி விட்டேன். இவ்வாறு மறுநாள் என்னை ஓர் ஆங்கிலேயரின் நீதிமன்றத்தில்

நிறுத்தப்பட்டது. எனக்கு எதிரில் தபால் துறை அதிகாரி அரசு தரப்பு வாதியாக ஆஜரானார். அப்போது நீதிபதி தனது கைகளால் எனது வாக்குமூலத்தை எழுதினார். முதலில் அவர் என்னிடம் அந்த கடிதத்தை கடிதத்தில் வைத்தீர்களா? அந்த பாக்கெட் உங்களுடையது தானா? என்று கேட்டார். நான் சிறிதும் தயங்காமல் இது எனது கடிதம் தான். இந்தப் பாக்கெட்டும் என்னுடையது தான் என்றேன். நான் தான் அக்கடிதத்தை பாக்கெட்டுக்குள் வைத்து அனுப்பினேன். ஆனால் நான் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தும் தீய நோக்கத்தில் இப்பணியைச் செய்யவில்லை.

இறுதியாக வாதியான அந்த அதிகாரி தமது எல்லா காரணங்களையும் எடுத்து வைத்து விட்டார். நீதிபதி தனது தீர்ப்பை எழுதுவதில் கவனம் செலுத்தினார். ஒன்றிரண்டு வரிகளை எழுதி விட்டு என்னிடம் உங்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கிறேன் என்றார். இதனைக் கேட்டு விட்டு நான் நீதிமன்ற அறையில் இருந்து வெளியே வந்து எனது உண்மையான பேருபகாரிக்கு நன்றி செலுத்தினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பொய்யை விட்டு வாழ இயலாது என்று நான் எப்படி கூறுவேன்? அத்தகைய வார்த்தைகள் என்னைப் பொருத்தவரை வீணானவையாகும். நான் கூறுகிறேன். உண்மையை விட்டு விட்டால் வாழ்வுக்கு வேறு வழியில்லை என்பது தான் உண்மையாகும். அல்லாஹ்வின் முழுமையாக தவக்குல் வைப்பவருக்கு அல்லாஹ்வே போதுமானவன் ஆகி விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். பொய்யைப் போன்ற வெறுக்கத்தக்க ஒரு பொருள் இல்லை. பொதுவாக உலகியல்வாதிகள், உண்மை பேசுபவர்கள் மாட்டிக் கொள்வார்கள் என்று கூறுகின்றனர். ஆனால் நாம் ஏன் அதனை நம்ப வேண்டும்? என் மீது ஏழு வழக்குகள் போடப்பட்டன. இறை அருளால் எதிலும் எனக்கு பொய் சொல்ல வேண்டிய தேவையே ஏற்படவில்லை. எதிலாவது எனக்கு இறைவன் தோல்வியைத் தந்தானா? எவராவது கூறட்டும்? அல்லாஹ் உண்மைக்கு ஆதரவளிப்பவன் ஆவான். ஓர் உண்மையாளருக்கு தண்டனையும் கிடைக்கலாம் என்பது எவ்வாறிருக்க முடியும்?

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அசல் விஷயமாவது, உண்மை கூறுவதனால் தண்டனையைப் பெறுகின்றார்கள் எனில் அது உண்மையின் காரணமாக அல்ல. ஒருவர் ஒரு வழக்கில் உண்மையை சொன்னதற்காக தண்டனை கிடைத்தால் அவர் உண்மை பேசியதால் தண்டனை கிடைத்தது. பொய் சொல்லி இருந்தால் தண்டனை கிடைத்திருக்காது என்பதன்று.

அவர்கள் கூறுகின்றார்கள்: அம்மனிதரது மறைவிலும் மறைவான ஒரு தீமைக்காக தண்டனை கிடைத்துள்ளது. பிற பாவங்களைச் செய்திருப்பார். மறைவாக பாவம் செய்திருப்பார். சில வேளை அதற்கு தண்டனை கிடைக்கிறது அல்லது வேறு பொய்யிற்காக தண்டனை கிடைக்கிறது. அல்லாஹ்விடம் அவர்களது தீமை மற்றும் விஷமத்தின் பட்டியலே இருக்கிறது. அவரது பல தவறுகள் இருக்கின்றன. ஏதாவது ஒன்றிற்காக தண்டனை பெறுகின்றார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் உண்மையை கடைபிடிப்பார் என்றால் அவர் இழிவடைவது ஒருபோதும் நடக்காது. ஏனெனில் அவர் இறைவனின் பாதுகாப்பில் இருக்கிறார். இறைவனது பாதுகாப்பு போன்று எந்த பாதுகாப்பான கோட்டையும், அடைக்கலமும் இல்லை. அல்லாஹ்வின் கோட்டையைப் போன்று வேறெந்த கோட்டையும் பாதுகாப்பு தராது. ஒருவருக்கு தாகம் எடுக்கும் போது ஒரு சொட்டு நீர் அருந்துவதால் தாகம் தீரும் என்றோ, கடும் பசியின் வேளையில் ஒரேயொரு தானியத்தை சாப்பிடுவதால் பசி தீரும் என்றோ எவராவது கூற முடியுமா? ஒருபோதும் முடியாது. எதுவரை முழுமையாக தண்ணீர் அருந்தவில்லையோ, உணவு உண்ணவில்லையோ அதுவரை ஆறுதல் ஏற்படாது. அதுபோன்று செயல்களில் முழுமை ஏற்படாமல் நல்ல விளைவுகள் உருவாகாது. குறை பட்ட செயல்கள் அல்லாஹ்வை திருப்திபடுத்த முடியாது அல்லது அது பரக்கத்திற்குரியதாகவும் இருக்காது. அல்லாஹ்வின் வாக்குறுதி இதுவாகும். எனது திருப்திக்கேற்ப செயல்படுங்கள். பிறகு நான் பரக்கத்தை வழங்குவேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகிறான். மன்யஃமல் மிஸ்கால ஸர்ரத்தின் கைரய்யரா (99:8) ஒருவர் அணு அளவு நன்மை செய்திருந்தாலும் அதன் விளைவை பார்ப்பார்.

இந்த விஷயங்களை கண்முன் நிறுத்தியவாறு ஒவ்வோர் அஹ்மதியும் ஆய்வு செய்ய வேண்டும். உதாரணமாக, வழக்குகளில் நாம் தவறான விளக்கங்களைப் பயன்படுத்தவில்லை தானே? என்று ஆய்வு செய்யுங்கள். பிறகு நாம் தொழில்களில் இலாபத்திற்காக தவறான விளக்கங்கள் தருவதில்லை தானே? அல்லது சம்பந்தங்கள் பேசும் போது தவறான விளக்கங்கள் தருவில்லை தானே? அல்லது பெண்ணைப் பற்றி பையனைப் பற்றி விபரங்கள் கொடுக்கும் போது ஆகிய எல்லா நிலையிலும் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோமா? என்பதை ஆராய வேண்டும். அரசாங்கத்திடமிருந்து Social Welfare கருணைத் தொகையை வாங்குவதற்காக பொய்யை துணைக்கு அழைக்கவில்லையே என்று பார்க்க வேண்டும். இவ்விஷயத்தில் பலரது நிலையில் எதிர்மறையான நிலைபாடே காணப்படுகிறது. தமது வருமானத்தை மறைத்து அரசிடமிருந்து கருணைத் தொகை பெறப்படுகிறது. அதனால் வரியும் கட்டப்படுவதில்லை. வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது.

நாம் நினைவில் கொள்ள வேண்டும். அரசு மிகவும் ஆழமாகச் சென்று உண்மையைக் காண முயற்சி செய்கிறது அல்லது செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசின் முன் தவறான நடவடிக்கைகள் வரும் போது அந்த மனிதருக்கு பிரச்சனைகள் உருவாகிற அதே வேளையில் அவர் அஹ்மதி என்று தெரிய வரும் போது அஹ்மதிய்யத்திற்கும் அவப்பெயர் ஏற்படும். எனவே, எவராவது இந்த அடிப்படையில் தவறான தகவலைப் பயன்படுத்துகிறார் எனில் அவர் தனது உலகியல் பயனை மட்டும் பார்க்காமல் சொற்ப தொகையில் வாழ்வைக் கழித்து பொய்யில் இருந்து விலகி அல்லாஹ்வை திருப்திப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

அதுபோன்று பொறுப்பாளர்கள் தம்மை ஆய்வு செய்யுங்கள். தமது அறிக்கையில் தவறான தகவல்கள் தருவதில்லையே? முக்கியமான விஷயத்தை விட்டு விடவில்லையே? என்று பார்க்க வேண்டும். சில நேரங்களில் பொய் கூறப்படவில்லை என்றாலும் முழுமையான கல்வே ஸதீது நேரிய வார்த்தையைப் பயன்படுத்தாமல் இருந்தால் அதுவும் தவறாகும். தக்வாவைப் பயன்படுத்தி விவகாரங்களை சரிசெய்ய வேண்டும். எனவே ஆழத்திற்குச் சென்று விவகாரங்களை கவனிக்க வேண்டிய தேவை உள்ளது. ஒவ்வொருவரும் தனது சுயநலத்திலிருந்து வெளியேறி, தமது அகம்பாவத்திலிருந்து வெளியேறி இறைவனது பயத்தை முன்னிறுத்தி தமது விவகாரங்களை சரி செய்ய வேண்டும்.

உலகப் பற்றானது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று பிளவின் பக்கம் கொண்டு செல்லும். பிறகு பிளவினால் ஜமாஅத்தின் ஒருமைப்பாடு நிலைக்காது என்பது தெளிவாகும். குறைந்தபட்சம் அந்த சமுதாயத்தில் அந்தப் பகுதியிலாவது குழப்பம் ஏற்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்க நினைத்த ஒருமைப்பாடு முடிந்து விடும். உலகப் பற்றின் காரணமாகத்தான் பிற பிரிவுகளும் உருவாயின. அதுபோன்று இங்கும் பிரிவுகள் உருவாக்கி விடும். ஒரு தீமையிலிருந்து பல தீமைகள் உருவாகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று தீமைகள் பிள்ளைகளை பெற்றுக் கொண்டே செல்லும்.

எனவே அஹ்மதியாக இருந்து கொண்டு நமது பொறுப்புகள் அதிகமாகின்றன. அதனை கண்முன் நிறுத்த வேண்டும். உண்மையான அஹ்மதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது முன்மாதிரியின்படி செயல்பட முயற்சி செய்பவர் ஆவார். இறைவனது வழிகாட்டலின்படி நடக்க முயற்சி செய்பவர் ஆவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இதே கருத்தின் தொடர்ச்சியாக முன்னர் நான் கூறினேன். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எவர் இறைவனுக்காக ஆகி விட்டாரோ அவருக்காக இறைவன் ஆகி விடுகின்றார். இறைவன் யாரிடமும் ஏமாற மாட்டான். காட்டுதல் தந்திரம் மூலமாக எவராவது இறைவனை ஏமாற்ற நினைத்தால் அவர் முட்டாளும் அறியாதவரும் ஆவார். அவர் தான் ஏமாற்றமடைவார்.

உலகத்தின் அழகு உலகத்தின் நேசம் ஆகியவை எல்லா தீமைகளின் வேர் ஆகும். உலகின் அழகு உலகின் பற்று தீமைகளின் வேர் ஆகும். அத்தகையோர் அல்லாஹ்வுக்கு பயந்தால் மார்க்கத்திற்காக கவலை சஞ்சலம் கொண்டால் நிறைய பலன் பெற்றிருப்பார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனது மகத்துவத்தை உள்ளத்தில் கொள்ள வேண்டும். அவனுக்கு எப்போதும் பயப்பட வேண்டும். அவனது பிடி ஆபத்தானது. அவன் திரையிடுகிறான். மன்னிக்கிறான். ஆனால் எவரையாவது பிடித்தால் கடுமையாகப் பிடிக்கிறான். எந்த அளவுக்கு என்றால் லா யகாஃபு உக்பாஹா (91:16) அவர்களின் பின் சந்ததிகளின் நிலை என்னவாகும் என்று கூட சிறிதும் பொருட்படுத்த மாட்டான். இதற்கு எதிரில் இறைவனுக்கு பயன்படக்கூடியவர்கள் அவனது மகத்துவத்திற்கு உள்ளத்தில் இடம் அளிப்பவர்கள் ஆகியோருக்கு அல்லாஹ் கண்ணியமளிக்கிறான். அவர்களுக்காக அவனே பொறுப்பேற்கிறான்.

ஹதீஸில் வருகிறது. மன் கால லில்லாஹி கானல்லாஹ லஹு – எவர் அல்லாஹ்வுக்காக ஆகி விட்டாரோ அவருக்காக அல்லாஹ் ஆகி விடுகிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இறைவன் வெறுமனே நாம் முஸ்லிம்கள் அல்லது மூஃமின்கள் என்று கூறுவதால் மகிழ்ச்சி அடைவதில்லை. இந்த வகையில் அவன் கூறுகிறான்: நாங்கள் ஈமான் கொண்டோம் என்று அவர்கள் கூறுவதனால் மட்டுமே சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவோம் என்று எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்களா?

அது இந்த போதனையைத்தான் தந்துள்ளது. கத்அஃப்லஹ மன்ஸக்காஹா (91:10) எவர் தன்னை தூய்மைப்படுத்திக் கொண்டாரோ அவர் வெற்றி பெற்று விட்டார். அவதாது எல்லா வகை புதியவை, பாவம், கட்டுப்படாமை, மன எழுச்சிகள் அனைத்தையும் விட்டு இறைவனுக்காக தனித்து விட்டவர், மன ரசனைகளை விட்டு விட்டு இறை வழியில் சிரமங்களுக்கு முன்னுரிமை வழங்கியவர் உண்மையில் ஈடேற்றம் பெற்றவராவார். எவர் இறைவனுக்கு முன்னுரிமை வழங்குவாரோ அவர் உலகம் மற்றும் அதன் பகட்டை விட்டு விடுகிறார்.

அல்லாஹ் நமக்குள் செயல் ரீதியான மாற்றங்களை உருவாக்கச் செய்வானாக! உண்மையின் தரத்தின் முக்கியத்துவத்தை புரியச் செய்வானாக! மார்க்கத்தை உலகின் மீது முன்னுரிமை தருபவர் ஆக்குவானாக! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்து நமது வாயளவில் அன்றி மாறாக உண்மையாகவே அன்னாரின் தோற்றத்தை நோக்கத்தைப் புரிபவர்களாகவும் அதனை நிறைவேற்றுபவர்களாகவும் ஆக்குவானாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரியின்படி நடக்க முழுமையாக முயற்சி செய்பவர்களாக்குவானாக! அல்லாஹ்வின் திருப்திக்கு எல்லாவற்றின் மீது முதன்மை தந்து அதனை பெற முயற்சி செய்பவர்களாவோமாக! அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 05.02.2016
Tamil Translation : Muallim. M. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516